பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 26 சனிக்கிழமை 04.02.2024 கதிர் 95

### சூயஸ் கால்வாயின் நெருக்கடியை சமாளிக்க

# தென்னிந்தியாவுடன் தரைவழி தொடர்புக்கு இலங்கை முயற்சி

### இந்து சமுத்திர மாநாட்டில் ரணில் தெரிவிப்பு

இலங்கைதென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான புதிய தரைவழித் தொடர்புகளைஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். சூயஸ் கால்வாய் போன்ற போக்குவரத்துப் பாதைகள் எதிர்காலத்தின்தேவைகளுக்குப் போதுமானவைஅல்லஎன்பதால் இந்தத் தொடர்பை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். -

ஆஸ்திரேலியா பேர்த் நகரில் நடைபெற்ற7ஆவது இந்து

☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

இந்தியப் பாடகர் ஹரிகரன் மற்றும் நடிகை தமன்னா உள்ளிட்ட தமிழ் திரை மற்றும் சின்னத்திரை நட்சத்திரங்களின் நிகழ்ச்சி நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் இடம்பெற்றது. ரசிகர்களின் குழப்பத்தால் கடைசியில் நிகழ்ச்சி இடை நிறுத்தப்பட்டுவிட்டது.

அதற்கு ஒரேயொரு காரணம் தான் இருக்கமுடியும். அது ஒரு படிப்பினையாகவும் இனி வருபவர்களுக்கு அமையவும் வேண்டும். நெதேர்ன் யுனிவர்சிற்றி என்கிற தனியார் நிறுவனத்தால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏற்கனவே நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்து பின்னர் பிற்போடப்பட்ட நிகழ்ச்சிதான் நேற்று மீண்டும் நடத்தப்பட்டது.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்று கனடாவில்

☞ 2

## ஆஸி. அமைச்சருடன் ரணில் சந்தித்து பேச்சு

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஆஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் பெனீ வோங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

ஆஸ்திரேலிய அரசு சார்பில், இலங்கைஜனாதிபதியைமரியாதையுடன் வரவேற்றஆஸ்திரேலியவெளிவிவகார அமைச்சர், இந்த மாநாட்டுக்கு

☞ 2

# சமாதானத்துக்கான கதவுகள் இறுக மூடப்பட்டு கிடக்கின்றன

### ரணிலின் உரையின் மீது சிறீதரன் எம்.பி. விமர்சனம்

சமாதானத்தினைக்கட்டியெழுப்புவதற்கான கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டுள்ளன என்று சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கிவின்கொள்கை விளக்கஉரைமீதானவிவாதத்தின்இரண்டாம் நாளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் பொருளாதார பிரச்சினைகள் பற்றி கரிசனைகளைக்கொண்டிருந்தநிலையில்எட்டு தசாப்தங்களாக புரையோடிப்போயிருக்கின்ற இனப்பிரச்சினை தொடர்பாக பேசாது விட்டமை தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் ஏமாற்றத்தினைத் தந்துள்ளது.

இனங்களுக்கு இடையில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கான பல கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டுள்ளன. இலங்கையினுடைய தலைவர்கள் பலர் உலகத்தினை ஏமாற்றியுள்ளார்கள்.

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் ஐக்கியமானசூழல்ஏற்படுத்தப்பட்டு, சமாதானத்தினைநோக்கியபயணம்ஒழுங்குபடுத்தப்படாது பொருளாதார அபிவிருத்தி பற்றிப்பேசிக்கொண்டிருப்பதால் அது எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்று கூறுவதற்கு இல்லை.

ஐக்கியதேசியக்கட்சிதிறந்தபொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவவதற்கு முன்னதாக சிறிமாவோவின் பொருளாதாரக் கொள்கைகளால் நாடு தன்னிறைவு பெற்றிருநந்தது. நாடு முழுவதும் உற்பத்திகள் பெருகி இருந்தன. வடக்கு, கிழக்கில் உள்ள விவசாயிகள் தமது உற்பதிகளால் நன்மைகளை அடைந்தனர். சுயபொருளாதார வளர்ச்சி காணப்பட்டது. ஆனால் திறந்த பொருளாதாரக் கொள்கையால் எந்த நன்மைகளும் கிட்டவில்லை.

இலங்கையைப் போன்று தாமும் வளரவேண்டும் என்று கருதிய சிங்கப்பூரும் ஜப்பானும் இப்போது எங்கோ சென்றுவிட்டன. ஆனால் இலங்கை பாகிஸ்தான், எதிரோப்பியாவை விடவும் கீழ்நிலையில் உள்ளது.

இலங்கையில் மாறிமாறி அதிகாரத்தில் அமர்ந்தவர்கள் கோடிக்கணக்கான பணத்தைச்செலவழித்து போர் வெற்றி விழாக்களை நடத்தினார்கள். இராணுவத் தளபதிகளுக்குப் பதங்களைச் சூட்டினர். இதன்மூலம் மக்களை போரியல் மாயைக்குள் அவர்கள் வைத்திருந்தார்கள்.

'அரகலய' போராட்டத்தின் பின்னர் நிலைமைகள் மாறிவிட்டன. சிங்கள மக்கள் நிலைமைகளை உணரத் தலைப்பட்டு விட்டார்கள். நாடு பொருளாதார ரீதியில் பதாளத்துக்குச் சென்றுவிட்டது என்பது அவர்களுக்குப் புரிந்துள்ளது - என்றார்.

## அமெ. தூதர் ஜூலி சங் சபாநாயகருடன் சந்திப்பு

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றசெயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின்பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில்ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்கஅரசு, சர்வதேச அபிவிருத்திக்கானஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம்மற்றும்தேசிய ஜனநாயக நிறுவனம் ஆகியன ஊடாக நாடாளுமன்றத்துக்கு வழங்கி வரும் ஆதரவுகளுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நன்றிகளைத் தெரிவித்தார்.

விசேடமாக திறந்த நாடாளுமன்ற

☞ 2

## ஜோர்தானில் வேலையை இழந்த 60 இலங்கையர் நாடு திரும்பினர்

ஜோர்தானில் இரண்டுஆடைத்தொழிற்சாலைகள்மூடப்பட்டதன் காரணமாக வேலை வாய்ப்பை இழந்த இலங்கை தொழிலாளர்களில் 60 பேர் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஜோர்தானில் உள்ள இரண்டு ஆடை தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், 221 இலங்கை தொழிலாளர்கள்வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்.

இதுதொடர்பில்ஜோர்தானுக்கான இலங்கை தூதரக அதிகாரிகள், அந்நாட்டு தொழில் அமைச்சின் அதிகாரிகளை அண்மையில் சந்தித்து கலந்துரையாடியதாகவும் விசா காலம் நிறைவடைந்தும் அங்கு தங்கியிருக்கும் தொழிலாளர்களை அபராதம் விதிக்காமல் நாட்டுக்குதிருப்பிஅனுப்ப ஜோர்தான் அதிகாரிகள் இதன்போது இணக்கம் வெளியிட்டதாகவும்

☞ 8

## பொருளாதார மீட்சிப் பணிகளில் புலம்பெயர்ந்தோரும் இணைக

### ஆஸ்திரேலியாவில் ஜனாதிபதி அழைப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவுஸ்திரேலிய பேர்த் நகரில் வசிக்கும்ஆஸ்திரேலியா வாழ்இலங்கையர்களை நேற்றுசந்தித்துகலந்துரையாடினார். இலங்கைப் பொருளாதாரத்தைமீளக் கட்டியெழுப்புவதுமற்றும் நவீனமயப்படுத்துவது குறித்து புலம்பெயர் இலங்கையர்களுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி, அவற்றுடன் தொடர்ச்சியாகஇணைந்து கொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி தொடங்கியிருக்கும் வேலைத் திட்டத்தைப் பாராட்டிய புலம்பெயர் இலங்கையர்கள், கால நிலை, சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் அபிவிருத்திக்காகஆளும் தரப்பு முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தனர் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் புலம்பெயர் இலங்கையர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாட்டின் முன்னேற்றத்திற்காக நீண்டகால கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்த தமது தரப்பு

☞ 8

## ஜே.வி.பியின் இந்திய பயணம் எதிரிகளை பதற வைக்கிறது

### ஹரினி அமரசூரிய எம்.பி. தெரிவிப்பு

ஜேவிபியின்தலைவர் அனுரகுமாரதிஸநாயக்க தலைமையிலான குழுவினர் இந்தியா சென்றிருப்பது கறித்து தமது அரசியல் எதிரிகள் பதற்றமடைந்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர் கலாநிதி.ஹரணி அமரசூரிய தெரிவித்தார்.

மாற்றமடையும் உலக நிலமைகளைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப தலைமை வழங்கவல்ல அரசியல் கட்சியே தேசிய மக்கள் சக்தியாகும்என்றும்அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கிவின் கொள்கைவிளக்கஉரை மீதான விவாதத்தின் இரண்டாம் நாளான நேற்றுக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர்

☞ 8

## திருமலை – நாகப்பட்டினம் இடையே எண்ணெய் குழாய் அமைக்க திட்டம்

### கலந்துரையாடல்கள் இடம்பெறகின்றன

இந்தியாவின் நாகப்பட்டினத்தையும்திருகோணமலை எண்ணெய்க் குதத்தையும் இணைக்கும் வகையில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய்க் குழாய் அமைக்கும் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி வாரத்தினை முன்னிட்டு நடைபெறும்நிகழ்வில்பங்குபற்றுவதற்காகஇந்தியாவிற்கு சென்றுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, உத்தேச எண்ணெய்க் குழாய் நிர்மாணப்பணிகள்

☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

வசிக்கக்கூடிய தமிழ் வர்த்தகரின் நிறுவனமேநெதேர்ன்யுனிவர்சிற்றி. நடிகை ரம்பா அவரது மனைவி. இவர்களின் நிறுவனம்தான் வலி. வடக்கில் தனியார் காணிகளையும் ஆக்கிரமித்து ராஜபக்சக்களால் கட்டப்பட்ட அரசமாளிகையை பாதிக்கப்பட்ட மக்களோடு எந்தக் கலந்துரையாடல்களும் இன்றி, ரணில் அரசுடன் இரகசியமாகப் பேச்சு நடத்தி தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்காகப்பெற்றுக்கொண்டுள்ளது.

பாடகர்ஹரிகரனின்இசைநிகழ்ச்சியையும்நெதேர்ன்யுவர்சிற்றியின் 'பப்ளிசிட்டி'க்காகத்தான் ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். அந்த நிறுவனம் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களின் பட்டங்களைதொலைக்கல்விமுறை மூலம்இங்குவழங்கும்வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. எனவே அதற்கு ஆட்களைத் திரட்டுவதற்கான ஒரு 'புரொமோசன்' நிகழ்ச்சிதான் இது.

ரம்பாவின் மிக நெருங்கிய தோழியான, இறுதிப் போர் நடந்தபோது கலைஞர் தொலைக்காட்சியில் 'மானாட மயிலாட' நிகழ்ச்சியை மிகத் தீவிரமாக நடத்தியவர் என்று கடுமையாகவிமர்சிக்கப்பட்டவரான கலா மாஸ்டரின் தொடர்புகள் மூலமாக இந்த நிகழ்ச்சிக்கு நடிகர், நடிகைகள் பலரையும் அழைத்து வந்திருந்தனர்.

தாங்கள் இந்த நிகழ்ச்சியை பல கோடிகள் செலவழித்து நடத்துகிறார்கள் என்றும் தமிழ் மக்களை மகிழ்விக்கே நடத்துகின்றார்கள் என்றும் ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவார்கள் என்றெல்லாம் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் நிகழ்ச்சி என்னவோ முழுக்க முழுக்க வர்த்தக நோக்கத்திலான ஏற்பாடுகளுடன்தான் நடந்தது. நிகழ்ச்சிக்காக ரிக்கெட்டுக்கள் விற்கப்பட்டன. ஆகக் குறைந்தது 3 ஆயிரம் ரூபாய் ரிக்கெட் முதல் 25,000ரூபாய்ரிக்கெட்டுக்கள்வரை விற்கப்பட்டன. ரிக்கெட்டுக்களுக்கான இருக்கைகள்மட்டும்சுமார்25,000.

ஒதுக்கப்பட்ட இருக்கைகளுக்கு வெளியேதான் இலவசமாக நிகழ்ச்சியைப் பார்ப்பவர்களுக்கு அனுமதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தஇலவசஅனுமதியை நம்பி குவிந்த ரசிகர்களின் கூட்டத்தால் மேடையில் இருந்த பல நூறு மீற்றர்கள் தூரத்தில்தான் நிற்க முடிந்தது. அதாவது போரால் பாதிக்கப்பட்டு, பொருளாதாரத்தார நெருக்கடியால்மிதிக்கப்பட்டுநொந்து நூடில்ஸாகி நின்ற யாழ்ப்பாணத்து சாதாரணர்கள் கூட்டத்தால் தூரத்தில் தெரிந்த மேடையையும் அதில் உமிழப்பட்ட வர்ண விளக்குகளையும் மட்டும்தான் பார்க்க முடிந்ததே தவிர, அவர்கள் பார்க்க வந்த நடிகர் நடிகைகளைப் பார்க்க முடியவில்லை.

யாரைமகிழ்விக்கவந்தார்களோ, யாரைமகிழ்விப்பதற்காகநிகழ்சியை ஏற்பாடு செய்திருந்தார்களோ அவர்களைத் தீண்டத்தகாதவர்களாகத் தூரத்திலேயே நிறுத்தி வைத்ததன் விளைவு, அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்கள் தடுப்புக்களை உடைத்துக்கொண்டு தங்கள் அபிமான நடிகர் நடிகைகளைப் பார்க்க காட்டாறாகப் பாய்ந்ததில் நிகழ்ச்சியை இடையிலேயே நிறுத்த வேண்டியதாகிப் போனது.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து வர்த்தகம் செய்வது தவறல்ல. இங்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியிருக்கிறது. அதற்காக முதலீடுதேவையாக இருக்கின்றது. எனவே வாருங்கள் வர்த்தகம் செய்யுங்கள். அதையெல்லாம் வரவேற்கின்றோம். நாங்கள் செய்வது வர்த்தகம்தான் என்று நேர்மையாக மக்களிடம் எடுத்துச் சொல்லி அதனைச் செய்யுங்கள். அதனை மக்கள் முழு மனதோடு ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், அதிக இலாபத்துக்கான குறுக்கு வழியாக மக்களுக்கு உதவுகின்றோம், மக்களுக்காகத்தான் எல்லாவற்றையும் செய்கின்றோம் என்று அரசியல்வாதிகள் மாதிரி பொய் சொல்லி ஏமாற்றாதீர்கள். அப்படி ஏமாற்றியதன் விளைவுதான் நேற்றைய நிகழ்ச்சியை நடத்த முடியாமல் போனமைக்கான காரணம்.

இதற்கு முன்னரும் முற்றவெளியில் கட்டண இசை நிகழ்ச்சிகளும் முற்றிலும் இலவசமான இசை நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன. இந்திய நடிகர்கள், பாடகர்கள்வந்தேஇந்தநிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார்கள். அப்போதெல்லாம் இந்த வகையிலான குழப்பங்கள் இடம்பெற்றதில்லை. மக்களுக்கான, அவர்களைமகிழ்விப்பதற்காக இசை நிகழ்ச்சி நடத்துகின்றோம் என்று பெருமெடுப்பில் பரப்புரை செய்துவிட்டு, மக்களிடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டு, ரிக்கெட் வாங்கியவர்கள்தான் நிகழ்ச்சியைப்பார்க்கமுடியும்என்கிற வகையில்வர்த்தகரீதியாக அதனை ஏற்பாடு செய்ததுதான் நேற்றைய சொதப்பல்கள் அனைத்துக்கும் காரணம்.

புலம்பெயர் தேசங்களில் இருந்து நீங்கள் வியாபரம் செய்ய வந்தால் அதனை மட்டும் செய்யுங்கள். மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்கவும் அல்லது உங்கள் பணத்தை வைத்து இங்கு அரசியல் செய்யவும் முயற்சிக்காதீர்கள். அப்படிச்செய்தால் ஒருநாள் இப்படித்தான் எல்லோரும் அவதிப்படவேண்டி வரும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தென்னிந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமுத்திர மாநாட்டில்ஆற்றியபிரதான உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇதனைத்தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகள் மற்றும் சமுத்திரத்தை பெருமளவில் பயன்படுத்தும் பிற நாடுகளைப் பாதிக்கும் பொதுவான எதிர்பார்ப்புகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் 7ஆவது இந்து சமுத்திர மாநாடு ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நேற்றுத் தொடங்கியது. இன்றும் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை 'நிலையான மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை நோக்கி' என்ற தொனிப் பொருளில் இந்திய வெளியுறவு அமைச்சு மற்றும் ஆஸ்திரேலியாவுடன் இணைந்து இந்தியமன்றம்ஏற்பாடுசெய்துள்ளது.

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங், இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கர், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் டொக்டர்விவியன்பாலகிருஷ்ணன் மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் உள்ளிட்ட இந்துசமுத்திரநாடுகளின் பிரதிநிதிகள், இந்தியமன்றத்தின்ராம் மாதவ் உள்ளிட்ட பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

இந்து சமுத்திரத்தில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு விரிவான பிராந்திய திட்டமொன்று அவசியம். அதனை இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான ஐயோரா (ஞாநுயூபு) தலைவர்களினால் மட்டுமே செய்ய முடியும்.

கடல் மற்றும் விமான போக்குவரத்துச் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்காத வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலான ஒழுங்கு விதிகள், காலநிலை நெருக்கடியை கையாள்வது மற்றும் இந்து சமுத்திரத்தின் நிலையான பயன்பாடு தொடர்பான வழிகாட்டல் விதிமுறைகள் இங்கு அவசியமாகின்றன.

இந்து சமுத்திர வலய நாடுகளின் நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான இந்து சமுத்திரத்தை உருவாக்க முடியும். உலகின் பலமான நாடுகள் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் வரை காத்திருக்காமல், தமக்கான பாதையை அமைத்துக் கொள்ளும் இயலுமை இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு உள்ளது.

2050 ஆண்டளவில் இந்தியா, இந்தோநேசியா போன்ற நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி 8 மடங்காக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை வலுவூப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளைமேம்படுத்தவேண்டியது அவசியம்.

வர்த்தகப் போக்குவரத்துகளுக்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சூயஸ் கால்வாய் உள்ளிட்டவை எதிர்காலத்தில் போதுமானதாக இருக்காது. எனவே, பிராந்தியத்தின் விநியோக மையம் என்ற வகையில் இலங்கை தென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்குவதற்கானபுதியதரைவழித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகின்றது - என்றார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உறுதிப்பாட்டைப் பேணுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதேபோன்றே காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளைக் கண்டறிவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்துசமுத்திரத்தின் உறுதிப்பாட்டுக்காக, 5 வருடங்களுக்குள் சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான பாலஸ்தீன அரசை நிறுவி, இஸ்ரேல் அரசின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளின் மூலம் காஸா பகுதியில் போர் மோதல்களைவிரைவாகமுடிவுக்குக் கொண்டுவருவதுஅவசியம்என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

## அமெ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்புக்கான நாடாளுமன்ற ஒன்றியம், பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், நாடாளுமன்ற ஆய்வுப் பிரிவின் சேவைகள் மற்றும் பொது வெளிக்கள பணிகளுக்கு வழங்கும்உதவிகளுக்குசபாநாயகர் இதன்போது நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரொன்று ஆரம்பிக்கப்படும் போது மேற்கொள்ளப்படும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றி ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கேட்டறிந்தார். அதற்கமைய அரச சட்டமூலங்கள், தனியார் சட்டமூலங்கள் மற்றும் ஏனைய நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பானஎதிர்காலநடைமுறைகள் பற்றி சபாநாயகர் விளக்கமளித்தார்.

இதேவேளை, சட்டவாக்க செயற்பாடுகள் தொடர்பில் இரு தரப்பினருக்கும்இடையில்விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், ஜனநாயக ஆட்சியின் தூணாக பாராளுமன்றம் மேற்கொள்ளும் முக்கியமான பணிகள் தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டது. அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையில் ஜனநாயகம், மனித உரிமைகள், முதலீடு, பாதுகாப்பு போன்ற துறைகளில் தொடர்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் இந்திய எண்ணெய் நிறுவனத்துடன்கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

இந்தியஅரசுஇந்தியஎண்ணெய் நிறுவனத்தின் ஊடாக இந்த திட்டத்தினைமுன்மொழிந்துள்ளதாக அமைச்சர் தனது எக்ஸ் பக்கப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப ஆய்வு, சந்தைப் பகுப்பாய்வு, நிதி பகுப்பாய்வு மற்றும் வர்த்தக மாதிரி ஆகிய விடயங்கள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைஎண்ணெய்க் குதங்களில் முதலீடுகள் மற்றும் செயற்றிட்டத்தினைவிரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடினார் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம்ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள ரிங்கொமலி பவர் (Trincomalee power) நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும், சம்பூர் சூரிய மின் சக்தி திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக இந்தியாவில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர பதிவிட்டுள்ளார்.

இலங்கையில் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி திட்டத்தில் முதலீடு செய்வதற்கு இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நாடாளுமன்றக் குழுக்களின் உறுப்பினர் விவரம் அறிவிப்பு

நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளுக்கு அமைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, அரச நிதி பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு போன்ற குழுக்களுக்கு ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவதுகூட்டத்தொடரில் பணியாற்றுவதற்கான நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேர்தன அறிவித்தார்.

அந்தந்தக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விபரும் வருமாறு;

நாடாளுமன்றஅலுவல்கள்பற்றிய குழுவின் தவிசாளராகச் சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், நாடாளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உள்ளிட்டவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இது தவிரவும், நாடாளுமன்ற உறுப்பினர்களான, சட்டத்தரணி நிமல்சிறிபாலதசில்வா, சட்டத்தரணி பவித்ராதேவிவன்னிஆரச்சி, டக்ளஸ் தேவானந்தா, கௌரவ மஹிந்த அமரவீர, சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி, கஞ்சன விஜேசேகர, சமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பர்னாந்து, கயந்த கருணாதிலக்க, அநுர திசாநாயக்க, (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ், சட்டத்தரணி ரஊப் ஹகீம், காமினி லொக்குகே, வஜிர அபேவர்தன, ஏ. எல். எம். அதாஉல்லா, சீ.பீ. ரத்நாயக்க, ரிஷாட் பதியுதீன், ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், ரோஹித அபேகுணவர்தன, சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ, சட்டத்தரணி சாகர காரியவசம், இரான் விக்கிரமரத்ன, ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று சாபாநாயகர் அறிவித்தார்.

### அரச நிதி பற்றிய குழு

அரச நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள்தெரிவுக்குழுவினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டுள்ளனர் என சபாநாயகர் தனது அறிவிப்பில் தெரிவித்தார்.

செஹான் சேமசிங்க, (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல, கலாநிதி) சுரேன் ராகவன், அனுப பஸ்குவல், ஜோன்ஸ்டன் பர்னாந்து, சட்டத்தரணி ரவூப் ஹகீம், வஜிர அபேவர்தன, விஜித ஹேரத், மஹிந்தானந்த அலுத்கமகே, துமிந்த திசாநாயக்க, சட்டத்தரணி சந்திம வீரக்கொடி, (கலாநிதி) நாலக கொடஹேவா, (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, நிமல் லான்சா, எம்.ஏ. சுமந்திரன், (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன, மயந்த திசாநாயக்க, ஹர்ஷணராஜகருணா, யூ.கே. சுமித் உடுகும்புர, (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட, இசுரு தொடன்கொட , சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த, சட்டத்தரணி மதுர விதானகே, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் தலைவராக மீண்டும் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### வழிவகைகள் பற்றிய குழு

வழிவகைகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள்தெரிவுக்குழுவினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய, லசந்த அலகியவன்ன, அநுராத ஜயரத்ன, சட்டத்தரணி சிசிர ஜயகொடி, சஷீந்திர ராஜபக்ஷ, சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன, சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப், சஞ்ஜீவ எதிரிமான்ன, நாலக பண்டார கோட்டேகொட.

### போக்குவரத்து அமைச்சுசார் ஆலோசனைக் குழு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்அலுவல்கள்பற்றிய அமைச்சுசார்ஆலோசனைக்குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய திலும் அமுனுகம, ரோஹித அபேகுணவர்தன, அஸோக அபேசிங்ஹ, மொஹமட் முஸம்மில், லலித் வர்ண குமார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### சுற்றுலாத்துறை அமைச்சுசார் ஆலோசனைக் குழு

சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழுவில்பணியாற்றுவதற்காக பின்வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தெரிவுக்குழுவினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய (திருமதி) கீதாசமன்மலீ குமாரசிங்ஹ, கயந்தகருணாதிலக்க, கபில அதுகோரல, அமிர்தநாதன் அடைக்கலநாதன், நிபுண ரணவக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஆஸி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வழங்கிய சிறப்பான ஆதரவையும் பாராட்டினார்.

இந்து சமுத்திரம் தொடர்பில் ஆஸ்திரேலிய அரசின் அர்ப்பணிப்பு மற்றும் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள ஒத்துழைப்பு குறித்தும் அமைச்சர் விளக்கினார்.

இந்து சமுத்திர வலய நாடுகள் சங்கத்தின் (ஐமுசுயு) செயற்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்துசமுத்திரத்தைநோக்கிஅதிகாரத் தளங்கள் மாறுவதன் மூலம், பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது ஒரு முக்கியமான படியாகும் என்று சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, அத்துறையில் ஏற்கனவே பல அவுஸ்திரேலிய நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

'கொழும்பு முறைமை' வரையிலான இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகள் குறித்து இங்கு நினைவுகூரப்பட்டதுடன், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல புதிய துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவுஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சரும் கலந்துரையாடினர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஷ்வர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழும்பகே மற்றும் ரிஷான் டி சில்வா ஆகியோர் இதன்போது உடனிருந்தனர்.


# சீனாவை கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்க நிர்வாகம் இயங்குவதாகக் கருதுகின்றோம்

## அமெரிக்காவில் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

பூகோள அரசியல் காரணமாக இலங்கைத் தீவை மையப்படுத்திய போட்டித்தன்மையிலே சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்காவுடைய நிர்வாகம் இயங்குவதாக நாங்கள் கருதுகின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினர்களான ‘சமர் அலி’ மற்றும் ‘லிகான் ஓமா’ ஆகிய இருவருடனும் - அதன் பின்னர் - அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரான ‘டொன் டேவிஸ்’ என்பவருடனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திப்பொன்றை புதன்கிழமை மாலை மேற்கொண்டிருந்தார். இந்த சந்திப்புக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





இன்றைய பூகோள அரசியல் காரணமாக இலங்கைத் தீவை மையப்படுத்திய போட்டித்தன்மையிலே சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்காவுடைய நிர்வாகம் இயங்குவதாக நாங்கள் கருதுகின்றோம். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க மேற்கத்தைய நாடுகளுக்கும், இந்தியா போன்ற நாடுகளுக்கும் சார்பான ஒரு நபராகக் கருதப்படுகின்றதனாலும், இந்த வருடம் ஒரு தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தாலும் ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மனித உரிமை மீறல்கள் - சட்டத்தின் ஆட்சி போன்ற ஜனநாயகத்துக்கு முக்கியமான தூண்களாக இருக்கக் கூடிய கொள்கைகள் அனைத்தையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் மிக மோசமான கொடூரமான சட்டங்களையெல்லாம் கொண்டுவந்து நிறைவேற்றுகின்றார்.

அந்த வகையில் நிகழ்நிலைக் காப்பு சட்டம் - வரவிருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் - அதே போன்று நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறலையும் நிரந்தரமாக முடக்குவதற்குரிய உள்ளூர் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இனிவரப்போகும் உண்மை மற்றும் நல்லிணக்கம் குறித்த சட்ட விடயங்களையும் அவரச அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றி - தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை அதிகரித்து - சிங்கள பௌத்த இனவாத சக்திகள் மட்டத்தில் தன்னுடைய செல்வாக்கை வளர்த்தெடுத்து - ராஜபக்ஸ தரப்புக்கு கடந்த காலங்களிலே வாக்களித்த மக்களுடைய வாக்கு வங்கியை முழுமையாக கைப்பற்றி ஆட்சிக்கு வருவதற்கு முனைப்பு காட்டி வருகின்றார்.

பூகோள அரசியல் காரணங்களுக்காக ரணில் விக்கிரமசிங்க மேற்கு சார்ந்த, இந்தியா சார்ந்த ஒரு விசுவாசியாக இருப்பதால் - அமெரிக்க இராஜாங்க திணைக்களம் - மற்றும் அரசு என்பன ரணில் விக்கிரமசிங்க பாரதூரமான மனித உரிமை மீறல்கள் - ஜனநாயக விரோத செயற்பாடுகளை செய்கின்ற போதும், பெருமளவில் அதனை எதிர்க்காமல் கடமைக்கு மட்டும் கருத்துக்களைத் தெரிவிப்பதுடன் அமைதியாக இருக்கின்ற தன்மை காணப்படுகின்றது.

ஆகவே, இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு செனட் சபையில் இருக்கக் கூடிய உறுப்பினர்களும் கீழ் சபையில் இருக்கக் கூடிய காங்கிரஸ் உறுப்பினர்களும் தமது குரலை எழுப்பி அழுத்தங்களை உருவாக்க வேண்டும்.

அவ்வாறன்றி இந்த நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது கடினமாக இருக்கும். அது மட்டுமல்லாமல் - இன்று பொருளாதார ரீதியாக முழுமையாக இலங்கை மேற்கத்தைய நாடுகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை இருக்கும் போது, அதுவும் விசேடமாக முதலீடுகள் எனப் பார்க்கின்றபோது, மேற்கத்தைய நாடுகளின் ஒத்துழைப்பில்லாமல் அந்த முதலீடுகள் வரப்போவதில்லை என்கின்ற ஒரு நிலையில் உதவி செய்வதற்கான நிபந்தனைகளைப் விதித்து பேரம்பேசக்கூடிய நிலைமை மேற்கு நாடுகளுக்கு இருக்கும் நிலையில் அதனைச் செய்யாமல் செயற்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது.

ஆகவே இப்படிப்பட்ட விடயங்களுக்கு அமெரிக்காவில் இருக்கக் கூடிய நிர்வாகத்துக்கு முற்போக்குவாத சிந்தனையோடு செயற்படுகின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ற வகையில் இதில் கூடிய அக்கறை காட்ட வேண்டும் என்பதுடன் மிக அவசரமாக செய்யவேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்தியிருந்தோம்.

அத்தோடு, எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய தமிழ்த் தேசத்தினுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அந்த நிலைப்பாட்டை பகிரங்கமாக வலியுறுத்தி அமெரிக்க அரசு அங்கீகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் முழுமையான சர்வதேச விசாரணையை நிலைநாட்டுவதற்கு நேரடியாக குற்றவியல் நீதிமன்றம் போன்ற விடயங்களை வலியுறுத்தி பொறுப்புக்கூறல் சம்பந்தமாக மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தோம் என்றும் தெரிவித்தார்.

(05-100)

# தேசப்பற்றுள்ள முஸ்லிம் புதல்வர்களையும் சுதந்திர போராட்ட வீரர்களாக அறிவிக்குக

## ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான்

(நூருல் ஹுதா உமர்)

தனது தாய் நாட்டின் சுதந்திரத்தை வேண்டி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடியதற்காக அக்காலத்தில் ஏகாதிபத்தியங்களால் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட முஸ்லிம் தேசபக்தர்களான திருகோணமலை சேகு தீதி, பீர்முஹம்மது மௌலவி, சலாம் உடையார் போன்றவர்களும் மட்டக்களப்பை சேர்ந்த மீரா ஹுசைன் காரியப்பர், ஹுசைன் லெப்பை உதுமா லெப்பை ஆகியோரும், அம்பாறை பிரதேசத்தை சேர்ந்த அபுபக்கர் ஈஸா, அனிஸ் லெப்பை ஆகியோரும் இருக்கத்தக்கதாக ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியில் பங்கு பற்றிய தேசப்பற்றுள்ள சிங்கள பூமிபுத்திரர்களை மட்டும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வர்த்தமானி மூலம் ஹீரோவாக அறிவிக்கப்பட்டமை அவரது நயவஞ்சகத் தனத்தைக் காட்டியது என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மைத்திரியின் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம் சுதந்திரப் போராட்ட வீரர்களை சுதந்திரப் போராட்ட வீரர்களாக அறிவிக்காமை பற்றி வாய் திறக்கவில்லை. மட்டுமின்றி முஸ்லிம்களையும், முஸ்லிம்களின் வழிபாட்டுத்தளங்களையும், மத ஸ்தலங்களையும் பாதுகாக்கவும் அதற்காகப் போராடுவதற்கும் கூட அந்த அரசாங்கத்தில் இருந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு துணிச்சல் இருக்கவில்லை. சுதந்திரத்தைக் கொண்டாடும் இன்றைய காலக்கட்டத்திலும் அரசியல் தலைவர்கள் பிளவுபட்டு, பதவிக்காக சண்டை போட்டுக் கொண்டுள்ளார்கள். இலங்கையை ஆட்சி செய்த பல அரசர்கள் நிலத்தைப் பிரித்து ஆட்சி செய்ததால் போர்த்துகீசியர்களும், டச்சுக்காரர்களும் அந்தச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதன் காரணமாக இலங்கை மண்ணின் இறையாண்மை உடைக்கப்பட்டது. அப்படியான சந்தர்ப்பத்தில் உலகின் பெரும்பாலான நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஏகாதிபத்தியவாதிகளான பிரித்தானியர்கள் இலங்கை மண்ணை முழுவதுமாகத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால், ஆங்கிலேயர்களின் சிந்தனையைப்பரப்ப நினைத்தது. அன்றைய இலங்கையில் வாழ்ந்த சிங்கள, தமிழ் முஸ்லிம் சமூகத்தின் மத, அரசியல், சிவில் நடவடிக்கைகளில் ஏகாதிபத்தியவாத பிரித்தானியர் பல்வேறு சதிகளைச் செய்தனர்.




எனவே, தேசப்பற்றுள்ள சிங்கள தமிழ் முஸ்லிம் சமூகம் இவ்வாறான பலவந்தமான மத, கலாசாரப் படையெடுப்பிற்கு எதிராகப் போராடுவதற்கு பல்வேறு வழிகளில் ஒழுங்கமைக்கப்பட்டது. இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தில் மத மற்றும் சிவில் தலைவர்கள் சித்தி லெப்பை, வாப்பிச்சி மரிக்கார், ஒராபி பாஷா, மாப்பிள்ளை லெப்பை அலீம், அப்துல்லா பின் அல் பாதிப் அல் யெமன், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ஆகியோரும் அவர்களில் அரசியல் தலைவர்கள் டாக்டர் டி.பி. ஜாயா, சேர் ராசிக் ஃபரிட், டாக்டர் பதியுதீன் மஹ்மூத், சேர் மாக்கான் மாக்கார், என்.எச்.எம்.அப்துல் காதர், டாக்டர் எம்.சி.எம்.கலீல் மற்றும் ஏ.எம்.ஏ. அஸீஸ் இவ்வாறு சமய, சிவில், அரசியல் தலைவர்கள் விடுதலைக்காகப் போராடிய போது முஸ்லிம் சமூகத்தில் ஊடகவியலாளர்கள் முஸ்லிம் தேசம், ஞான தீபம், முஸ்லிம் பாதுகாவலன், இஸ்லாம் மித்திரன் என்ற சிந்தனைப் புரட்சியை முஸ்லிம் சமூகத்தில் விதைத்தனர்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்நாட்டு முஸ்லிம்களின் சமய, கலாசார, அரசியல் உரிமைகளுக்காக அன்றைய கால கட்டத்தில் முஸ்லிம் சமூகத்தில் இருந்த மத, அரசியல் சிவில் தலைவர்கள் அளவற்ற தியாகங்களைச் செய்திருந்தனர். தற்போதைய அரசியல் தலைவர்கள் சிலர் தமது அரசியல் தியாகங்களை தமது அரசியல் நடைமுறைகளுக்காக பயன்படுத்தினாலும், கடந்த கால தலைவர்களுடன் ஒப்பிடுகையில், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்கள் செய்த தியாகங்கள் எதுவுமில்லை. மேலும், முஸ்லிம் சமூகத்தின் இஸ்லாத்திற்காக அக்கால சமயத் தலைவர்களால் கட்டப்பட்ட பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள் ஆங்கிலேயர்களின் உலக புவிசார் அரசியல் நலன்களுக்கான ஒப்பந்த சித்தாந்தத்தை நிறைவேற்றவில்லை மாறாக உஸ்மா னிய ஆட்சியின் ஆசீர்வாதத்துடன் தான் இருந்ததே ஒளிய ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து உஸ்மானிய ஆட்சியை கவிழ்க்க சதி செய்த துரோகிகளுடன் அல்ல என்பதை இன்றைய மத தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் அன்றைய மத, சிவில், அரசியல் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களுக்காக செய்தித் தாள்களை உருவாக்கி முஸ்லிம் சமூகத்திற்கு மத, உள்ளூர், வெளிநாட்டு புவியியல் அரசியல் அறிவை வழங்கினர். ஆனால் இன்று முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவர்கள் என்ன செய்தார்கள்? மாறாக அரசியல் தலைவர்கள் தமது தனிப்பட்ட அரசியல் அதிகாரத்திற்காக ஊடகவியலாளர்களைப் பயன்படுத்தியுள்ளனர். சுதந்திரத்தை வெல்வதற்காக இலங்கை தேசமாக ஒன்றிணைந்த தலைவர்கள் தற்போது அரசியல் தலைவர்களின் அதிகாரத்திற்காக பிளவுபட்டுள்ளன. மேலும் முஸ்லிம் சமூகத்தின் சில அரசியல் தலைவர்கள் பதவிக்காக முஸ்லிம்களை மத ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பிரித்ததால் நல்லாட்சி காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் சஹ்ரான் உட்பட சில தற்கொலை போராளிகள் பிறந்து முஸ்லிம்களிடையே துரோக தலைமுறையை உருவாக்கியுள்ளனர். இதனால் 30 வருட கொடிய போரின் போது முஸ்லிம்கள் செய்த தியாகம் கூட மாசடைந்துள்ளது. உலகளாவிய புவிசார் அரசியல் நலன்களுக்காக முஸ்லிம்கள், முஸ்லிம்களை மத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரித்துள்ளனர் என்பதை தற்போதைய பாலஸ்தீன சுதந்திரப் போர் நமக்குக் கற்றுக் கொடுத்தது. எனவே, உலக புவியியல் மற்றும் அரசியலின் படிப்பினைகளைப் புரிந்துகொள்வதற்கு நாம் மத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒன்றிணைந்து செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதை புரிந்து கொள்ளா விட்டால் முன்னேற நினைத்தால் பயந்து வாழ வேண்டியிருக்கும் என்பதை நினைவூட்டுகிறேன். எனவே முஸ்லிம் சமய, சிவில், அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மேற்கூறிய தேசப்பற்றுள்ள முஸ்லிம் புதல்வர்களை மாவீரர்களாக்கி 77வது சுதந்திர தினத்திற்கு முன்னராவது எமது கடமையை நிறைவேற்ற உறுதி பூண வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்டனத்துக்குரியவர் ரணில் மட்டுமா?

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைவிளக்கஉரையில்இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எதுவும் சொல்லப்படவில்லை, ஒரு வார்த்தைகூடஉதிரவில்லைஎன்றுநாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். அது உண்மையும்கூட. ஆட்சிக்கு வந்ததும் புதிய இலங்கையைப்படைப்போம்அதற்குஇனப்பிரச்சினையையும் தீர்ப்போம் என்று சூளுரைத்த ரணில் விக்கிரமசிங்க, இப்போது இனப்பிரச்சினை என்றால் என்னவென்று கேட்கக்கூடிய நிலையில் இருக்கின்றார் என்பது வெட்கப்படவேண்டிய கேவலமான சந்தர்ப்பவாத அரசியல்என்பதில்மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

ஆனால், ரணில் மட்டும்தான் அத்தகைய சந்தர்ப்பவாதஅரசியலில்ஈடுபடுகின்றாரா? என்றால் அதுதான் இல்லை. ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவராகியதும் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இனப் பிரச்சினையைத் தீர்க்க ”நான் தயார் நீங்கள் தயாரா” என்று ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்டார் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அரசுத் தலைவரின் கொள்கை விளக்க உரை மீதான தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார். அப்படி ரணில் கேட்டபோது மகிந்த ராஜபக்ச உட்பட அனைவரும் அதற்கு ”ஆமாம்” என்று பதிலளித்திருந்தனர். ஆனால், இன்று ரணில் தனது கொள்கை விளக்க உரையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து எதுவுமே பேசாதது குறித்து அவர்களில் எவருமே வாய் திறக்கவில்லை.

இன்னும் சொல்லப் போனால், தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வைத் தருவேன் என்று வேறு வேறு வார்த்தைகளில் தனது ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி வழங்கிய, இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ரணிலின் கொள்கை விளக்க உரையின்போதுநாடாளுமன்றத்தில்தான் இருந்தார். ஆனால், தீர்வு குறித்த விடயத்தை அவரும்கூட கையிலெடுக்கவில்லை. நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் நடக்கும் சிறு சிறு விடயத்தைக்கூட நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் என்கிற பதவியை வைத்துக் கேள்விக்குட்படுத்தும் சஜித் பிரேமதாஸ, இனப்பிரச்சினைத்தீர்வு என்கிறமுக்கிய வியடத்துக்கு மட்டும் குரல் கொடுக்கவில்லை.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தயார் என்று ரணிலுக்கு முன்பாக வாக்குறுதியளித்தவர்களில் அவரும் ஒருவர். இருந்தாலும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ரணிலின் போலி முகமூடியைக் கிழிப்பதற்கு அவர் தயாராக இல்லை. அவர் மட்–டுமல்ல முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், மலையகக் கட்சிகளின் தலைவர்களும்கூட இந்த விடயத்தில் ஒரு சிறு குரல் தானும் எழுப்பவில்லை. ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்கான தீர்வு என்கிற தடத்திலிருந்து விலகிச் செல்வது குறித்து இவர்கள் சாதிக்கும் மௌனம் ரணில் செய்யும் சந்தர்ப்பவாத அரசியலுக்கு சற்றும் குறைந்ததில்லை.

ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே இவர்கள் அனைவரும்செயற்படுகின்றார்கள். அரகலயவுக்குப் பின்னரும் அவர்களில் எந்த மாறுதல்களும் இல்லை. இந்தக் கூட்டத்தினருக்கு நடுவே தமிழ் உறுப்பினர்கள் மட்டும் தீர்வு, தீர்வு என்று காட்டுக் கூச்சல் போட்டும் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

# பேசாமல் பேசும் திறன்: எலான் மஸ்க் திட்டம் என்ன?

ஆ. காட்சன்



சிந்திப்பதை எல்லாம் மனிதனால் செயல்படுத்த இயலாது என்பதை உணர்ந்த கண்ணதாசன், ‘நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை’ என்று எழுதிவைத்துச் சென்றார். ஆனால், மனித மூளை சிந்தித்தால் மட்டுமே போதும், அதை அந்நபரின் முயற்சி இல்லாமலேயே செயல்பாடாக நடத்திக் காண்பிக்க முடியும் என்பதை நிரூபிப்பதில் முதல் மைல்கல்லைத் அமெரிக்கத் தொழிலதிபர் எலான் மஸ்க் எட்டியுள்ளார்.

### சிந்தித்தாலே போதும்

யாரையேனும் திறன்பேசியில் அழைக்க வேண்டுமானால், அதை எடுத்துத் தொடுதிரையைத் தொட்டு, பெயரைத் தேடிஅழைப்பதுதான் வழக்கம். சில திறன்பேசிகளில் நண்பரின்



பெயரை உச்சரித்தால் அதுவே அழைத்துவிடும். ஆனால், கைகளைப் பயன்படுத்த முடியாத அல்லது பேச முடியாத பாதிப்புகளை ஏற்படுத்தும் நரம்பியல் நோய்கள் உள்ள நபர்களால் இதைச் செய்ய முடியாது.

இப்படிப் பாதிப்புக்குள்ளான நபர்கள், நண்பர் ஒருவரைத் தொடர்புகொள்ள வேண்டுமென்று சிந்தித்தாலேபோதும், அவரது திறன்பேசி அவர் நினைத்த நண்பருக்கு அழைப்பைப் பெற்றுக்கொடுக்கும் அல்லது பேச முடியாத நபரின் சிந்தனைகளை அவரது நண்பருக்குத் திறன்பேசியின் மூலம் குறுஞ்செய்தியாக அனுப்ப முடியும். இதுதான் எலான் மஸ்க்கின் ‘நியூராலிங்க்’ (Neuralink) நிறுவனத்தின் ‘டெலிபதி திட்டம்’ (Telepathy project).

### எப்படிச் சாத்தியமாகும்? –

ஒரு நடவடிக்கையைச் செயல்படுத்தும் முன் நுணுக்கமாகத் திட்டமிடுவது, அதை உடல் உறுப்புகள் மூலம் செயல்படுத்துவது, பேச்சுத்திறன் போன்றவை முன்மூளையின் (Frontal lobe) வெவ்வேறு பகுதிகளின் செயல்பாடுகளாகும்.

உடல் உறுப்புகளைப் பயன்படுத்தி வெளியுலகைத் தொடர்புகொள்ள இயலாத நபரின், நடவடிக்கைகளைத் திட்டமிடும் (Planning) மூளைப் பகுதியில் ‘நியூராலிங்க் சில்லு’ (Neuralink Chip) ஒன்றை ரோபாட்டிக் நுண்துளை அறுவைச் சிகிச்சை மூலமாகப் பொருத்துவது நியூராலிங்க் திட்டத்தின் முதல்கட்டம்.

பின்பு, பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட இந்தச் சில்லுவின் நுண் இழைகள் மூலமாகச் சேகரித்து அனுப்பப்படும் அலைக்கற்றைகளை இதற்கென்று தயாரிக்கப்பட்ட திறன்பேசி அல்லது கணினிச் செயலிகள் குறிவிளக்கம் (Decode) செய்து திறன்பேசி அல்லது கணினியை வேலை செய்ய வைக்கிறது. இதன் மூலம் செயற்கை உறுப்புகளைக்கூட சிந்திப்பதன் மூலம் அந்நபரை செயல்படுத்தவைக்கலாம்.

மூளையின் சிந்தனைக்கும் திறன்பேசிஃ கணினிகளின் செயல்பாட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் இந்த மந்திரப் பயன்பாடு ‘மூளைக்-கணினி இடைமுகம்’ (Brain-Computer Interface) என்று அழைக்கப்படுகிறது.

### எதிர்காலத் திட்டங்கள்

மூளைநரம்பு நோய்களால் பார்வை, பேச்சுத்திறன், கைகால் செயலிழப்பு ஏற்பட்டவர்கள் தங்களது சிந்தனையில் உள்ளதை வெளிப்படுத்தவும், விரும்பிய செயல்களைச் சிந்திப்பதன் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்தும் வகையில் நியூராலிங்க் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மருத்துவத் துறைக்கு அப்பாற்பட்ட பல நோக்கங்களுடன் இது விரிவுபடுத்தப்பட இருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மூளையில் சில்லு பொருத்தப்பட்ட இரண்டுநபர்கள், தங்களுக்கிடையே சிந்தனைகளைத் தூரத்திலிருந்தவாறே பரிமாறிக்கொள்ள முடியும். இதனால்தான் இந்தத் திட்டத்துக்கு ‘டெலிபதி’ என்று பெயரிடப்பட்டுள்ளது. ஸ்டான்லி குப்ரிக்கின் ‘தி ஷைனிங்’ (1980) திரைப்படத்தில் இப்படியான அறிவியல் தொடர்புகள் இல்லாமலேயே, இதை ஒரு அமானுஷ்ய வித்தை போலச் சித்தரித்திருப்பதை சினிமா ரசிகர்கள் கவனித்திருக்கலாம்.

மூளை-க் கணினி இடைமுகத்தின் மூலம், சிந்திப்பதைச் செயற்கை நுண்ணறிவுக்கு அனுப்பி, செயலிகள் மூலம் கட்டுரைகூட எழுதவைக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான சிலிக்கான் துகள்களை மூளைக்குள் செலுத்தி, அதன் மூலம் நரம்புகளின் வேலைகளை வெளியிலிருந்தே கட்டுப்படுத்தும் திட்டமும் உள்ளது. இதற்கு நரம்புத் தூசுகள் (நேரசயட னரளவ) என்றழைக்கப்படும் தூசுபோன்ற சிலிக்கான் சில்லுகளைப் பயன்படுத்தவிருப்பதாகவும் தெரிகிறது. உச்சகட்டமாக, ஒருவர் உலகைப் புரிந்துகொள்ளும் விதத்தையே மாற்ற முடியும் என்பது ஆச்சரியமான, அதிர்ச்சிகரமான தகவல்.

### காத்திருக்கும் சவால்கள்:

இந்த உயிரிச் சில்லுவை (டீழை-உாணி) மனித மூளைக்குள் பதிக்கும் முதல்கட்ட வேலை ஜனவரி 29 அன்று வெற்றிகரமாக நடந்துள்ளது. இனி அது அனுப்பும் அலைக்கற்றைகளைக் குறிவிளக்கம் செய்து, நினைத்த காரியத்தைச் சாத்தியமாக்குவது பெரும் சவாலானது. இந்த மூளை-க் கணினி இடைமுகத்தை நிரப்புவது செயற்கை நுண்ணறிவுதான் (Artificial Intelligence).

எலான் மஸ்க்கின் இந்தப் பரிசோதனை முயற்சி ஒருவேளை சாத்தியமானாலும், கூகிள் போன்ற தேடுதளங்களில் நாம் ஒன்றைத் தேடும்போது, செயற்கை நுண்ணறிவின் மூலம் தரப்படும் பரிந்துரைகள் சில நேரம் தவறாக இருப்பதைப் போல், மூளைக் -கணினி இடைமுகத்தின் செயல்பாடுகள் ஒரு சதவீதம் இருந்துவிட்டால்கூட இதன் விளைவு மோசமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் இயங்கவிருக்கும் சுமார் 50 வகையான பணியாளர்களில் ஒருவர் மட்டுமே நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணராவார். மற்ற எல்லா பணியாளர்களும்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# மாணவர் பாடசாலையில் கல்விபயிலும் வேளையில் திறன் பாடத்திட்டங்களை பயிற்றுவிக்க வேண்டும்

## கிழக்கின் கேடயம் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

மாணவர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் வேளையில் அவர்களுக்கு திறன் பாடத்திட்டங்களை வழங்கி அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் முன்னர் பயிற்றுவிக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் 4 பேர் சேர்ந்து புதிய தொழில் முயற்சியை உருவாக்கும் முறைமையோடு மாணவர்களை வெளியில் அனுப்ப வேண்டும். அப்போதுதான் தொழில் தேடுபவர்களுக்குப் பதிலாக தொழில் துறையை உருவாக்குபவர்களை உற்பத்தி செய்ய முடியும் என கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கறைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ். எம். சபீஸ் தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை - அக்கரைப்பற்று பிரதேச பாடசாலைகளில் இருந்து திறமை சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா வாசம் அமைப்பின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் உரை நிகழ்த்திய அவர் -

துரதிஷ்டவசமாக எமது கல்வி முறை இன்னமும் அவ்விடத்துக்கு வரவில்லை. அதனால் பெற்றோர்கள் இம்முறையை நோக்கி எமது குழந்தைகள் மீது முதலீடு செய்யுங்கள். குறுகியகால திறன் கற்கை நெறிகளிலும் கவனம் செலுத்துங்கள். மேலும் இக்குழந்தைகள் விசேட ஆற்றல் கொண்டவர்கள். அவர்களது எதிர்காலம் சிறப்பாக அமைவதோடு இந்த சமூகத்துக்கும் பிரயோசனமுடையதாக அமைய பிரார்த்திக்கின்றேன்.

தூக்கம் வந்தால் தூங்கி விடலாம், பசி எடுத்தால் சாப்பிட்டு விடலாம், தாகம் எடுத்தால் நீர் அருந்திவிடலாம். ஆனால் சாதனை படைத்தவர்களின் உணர்வுகளுக்கு நாம் என்ன வழங்கிட முடியும். அது பாராட்டு ஒன்றேதான். அதனைத்தான் வாசம் அமைப்பு மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது. - என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், வாசம் அமைப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# பேசாமல் பேசும் திறன.....

மென்பொருள் தொழில்நுட்ப நிபுணர்கள்தாம். எனவே, இத்திட்டத்தை ஆய்வகப் பரிசோதனையிலிருந்து மருத்துவத் துறைக்கு மாற்றும்போது பல மருத்துவ நெறிமுறைச் சிக்கல்களுக்கு அது (ஆநனைஉயட நுவாஉையடஇசழடிடநஅள) உள்ளாக வாய்ப்புள்ளது.

**மனநலம் சந்திக்கவிருக்கும் சவால்கள்:**

அறிவியல் தொழில்நுட்பங்கள் முன்னேறும்போதெல்லாம் அதற்கேற்ப மனநலப் பாதிப்புகளின் அறிகுறிகளும் புதிய பரிமாணங்களை எடுத்துக்கொள்வது வழக்கம். வேற்றுக்கிரகவாசிகள் தங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள். தங்கள் சிந்தனைகளைப் பிறர் அறிந்துகொள்கிறார்கள் அல்லது அவை வெளியே ஒளிபரப்பப்படுகின்றன, தூங்கும்போது தங்களது மூளைக்குள் வைக்கப்பட்ட சில்லு மூலமாகத் தாங்கள் கண்காணிக கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகிறோம் என்றெல்லாம் மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மனப்பிறழ்வுக்கு ஆளாவதுண்டு.

ஆனால், நியூராலிங்க் திட்டத்தின் மூலம் இது உண்மையில் நடக்கச் சாத்தியம் ஏற்படுமாயின் நிஜத்திலிருந்து மனப்பிறழ்வை வித்தியாசப்படுத்துவது சவாலாக இருக்கும். சிந்தனைகளில் தோன்றும் எதிர்மறை எண்ண ஓட்டங்களெல்லாம் நிஜத்தில் நடந்துவிடுமோ (ஆயபஉைய வாமைெைப) என்ற பதற்றத்துக்கு ஆளாவது, எண்ணச் சுழற்சி நோயின்(முஊனு) ஓர் அறிகுறியாகும். ஆனால், சிந்திப்பதே செயல்பாட்டுக்குச் சமம் (Thought is equal to act)என்பது நியூராலிங்க் மூலம் சாத்தியமானால், திறன்பேசிகள், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்களால் பல சவால்களை எதிர்கொண்டுவரும் மனநலத் துறை, இன்னும் அதிகச் சவால்களைச் சந்திக்க நேரிடும்.

**எதிர்பார்ப்பும் விமர்சனங்களும்:**

எலான் மஸ்க்கை ஆதரித்துப் பலர் பேசினாலும் பல விமர்சனங்களையும் அவர் எதிர்கொண்டிருக்கிறார். டெஸ்லா கார்கள் மூலம் ஓட்டுநர் இல்லாப் போக்குவரத்து, ஸ்பேஸ் எக்ஸ் மூலம் விண்வெளி ஆய்வுகள், புவி வெப்பமாதலிலிருந்து விடுவிக்கும் முயற்சிகள் முதல் நியூராலிங்க் திட்டம் வரை எல்லாமே அவரது விசித்திரமான அல்லது பிரம்மாண்ட மனநிலையின் வெளிப்பாடுகள் என்று சில அறிவியலாளர்கள் விமர்சிக்கின்றனர். கண்ணதாசன் பாடலில் சொன்னதுபோல, கடவுளின் இடத்தை மனிதனின் மனதிலிருந்து எடுக்கும் 'எதிர் கடவு'ளை உருவாக்கும் முயற்சியாக இதைக் கருதி இறையியலாளர்களும் எதிர்ப்புக் காட்டி வருகிறார்கள். 'நியூராலிங்க் சில்லு' மூளையில் பொருத்தப்பட்டுள்ள நபரின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், விரைவில் பிரத்யேகச் செய லிகள் மூலம் அவரது சிந்தனை ஓட்டங்கள் கண்காணிக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒருவேளை இம்முயற்சி வெற்றிகரமாக முடிந்தால் மருந்துகள், அறுவைசிகிச்சைகளால் பயன்பெற முடியாமல் இயன்முறை மருத்துவத்தை மட்டும் நம்பியிருக்கும் உறுப்புகள் செய லிழந்த, ஆனால் சிந்திக்கும் திறனுள்ள நபர்களுக்குப் வரப்பிரசாதமாக அமையலாம்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழில் 106 பயனாளிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டது









யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 106 பயனாளிகளுக்கு "அறுதி உறுதிப்பத்திரம் வழங்கல்" நிகழ்வு இன்று இடம்பெற்றது. இதன்போது மேலதிகமாக 20 பயனாளிகளுக்கு வீடமைப்பு கடனுக்கான முதற்கட்ட காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, உப தலைவர் லக்ஷ்மன் குணவர்தன, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.



## ஜோர்தானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டது.

அத்துடன், கடந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரையில் அவர்களுக்கு வழங்கப்படவிருந்த சம்பள நிலுவைத் தொகையையும் வழங்குவதற்கு தொழிற்சாலை நிர்வாகம்நடவடிக்கைஎடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

## ஜே.வி.பியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர்.. இந்திய அழைப்பில் அங்கு சென்றிருப்பது பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டுத்தியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலையீட்டினால் இந்தப் பயணம் அமைந்துள்ளதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். அதுதவறான பரப்புரை. இந்திய மக்கள் அரசின் அழைப்பில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த சந்தர்ப்பம் இது.

எமது குழுவினரின் இந்தியப் பயணம்உள்நாட்டில்உள்ளவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பதில் துளியும் ஐயமில்லை. இந்தப் பயணத்தின் ஊடாக தேசிய மக்கள் சக்தியின் சர்வதேச தொடர்புகள் வலுப்பெற்றுள்ளன.

அது தொடர்பில் எமது அரசியல் எதிரிகள் பதற்றமடைந்துள்ளனர். மாற்றமடையும் உலக நிலைமைகளைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப தலைமை வழங்கவல்ல அரசியல் கட்சியே தேசிய மக்கள் சக்தியாகும்.

நீங்கள் அனைவரும் எதிர்காலத்தினை மறந்து செயற்பட்டாலும் நாம் அவ்வாறு செயற்படுவதில்லை. நாம் நாட்டு மக்களுக்காகவும், அந்த மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தியும் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்க ஒருபோதும் அச்சமடையப்போவதில்லை.

அதேநேரம், தேவைகளுக்கு ஏற்ப நாம் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கு தயார். நாம் கற்பனையான விடயங்களில் பணியாற்றுவதில்லை - என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அர்பணிப்புடன்செயற்படும்என்றும் தெரிவித்தார்.

தனியார்பல்கலைக்கழகங்களை நிறுவுதல் உள்ளிட்ட புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டங்கள் தொடர்பிலும்ஜனாதிபதி இதன்போது தெளிவூட்டினார்.

புலம்பெயர் இலங்கையர்களுக்கான அலுவலகம் ஒன்றை பேர்த் நகரில் தொடங்க கொழும்பு தீர்மானித்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டிய தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கை புலம்பெயர் சமூகம்அதனூடாகஆளும்தரப்புவலுவான முறையில் தொடர்புகளைப் பேணமுடியும்என்றும்தெரிவித்தார்.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட நிர்வாகத்தீர்மானங்கள்தொடர்பான அறிக்கை உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்த சாகல ரத்நாயக்க, இந்த மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு புலம்பெயர் இலங்கையர்களின் ஆதரவைதொடர்ந்தும்வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இலங்கையைமீளக்கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள ரணிலின் ஆட்சி தொடங்கியிருக்கும் வேலைத்திட்டம் குறித்து ஆயலூறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும் இங்குவிளக்கமளித்தார். ஆஸ்திரேலியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகள் சித்ராங்கனி வாகீஷ்வர, நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக மாயாதுன்ன, மேற்கு அவுஸ்திரேலியாவின் இலங்கை கொன்ஸ்லர்ஜெனரல்உள்ளிட்டபலரும்இதன் போது கலந்துகொண்டிருந்தனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....




காலைக்கதிர் Kalaikkathir

# கந்தளாய், சூரிய புர 9 ஆம் கட்டை காட்டுப்பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகரிப்பென மக்கள் விசனம்

(எப்.முபாரக்)

திருகோணமலை - கந்தளாய், சூரிய புர 9 ஆம் கட்டை காட்டுப்பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் அனைத்தும் சூரிய புற 9 ஆம் கட்டை பகுதியில் கொட்டபடுகின்ற நிலையில் அதனை அவதானித்து வைத்துள்ள யானைகள் அவ்வாறு குப்பைகளிலுள்ள உணவுகளை உட்கொள்கின்றன.

சுமார் 20 யானைகள் கூட்டமாக இப்பகுதியில் வசிப்பதாகவும் இந்த யானைகள் தினந்தோறும் இவ்வாறு வந்து குப்பைகளை உண்டு விட்டு மீண்டும் காட்டிற்குள் சென்றுவிடுவதாகவும் அப்பகுதி மக்கள் எம்மிடம் தெரிவித்தார்கள்.

இதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ஓர் அச்சமான சூழ் நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சில நேரங்களில் பகல் வேளைகளில் கிராமங்களுக்குள் யானைகள் புகுந்து அச்சப்படுத்துவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு மேலும் அண்மையில் வய லுக்கு சென்ற விவசாயி ஒருவரை யானை தாக்கி உயிரிழந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

யானைகளை கட்டுப்படுத்த யானை வேலிகளை அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# புதிய கல்விச் சீர்திருத்த முன்னோடி நடவடிக்காக கனகராயன்குளம் ம.வி, ஒட்டிசுட்டான் ம.வி தெரிவு

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் முன்னோடி திட்டத்திற்காக வடக்கு மாகாணத்தில் இருந்து வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயம் மற்றும் முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 8-11 வரையான மாணவர்களுக்கு எண்ணிம குடியுரிமைத் திறன்கள் பாடம் ஐ.நாவின் இணை நிறுவனமான யுனிசெப்பின் நிதி அனுசரணையுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக, இலங்கையின் ஒவ்வொரு மாகாணங்களிலும் இருந்து இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு முன்னோடி செயற்றிட்டமாக பாட அறிமுகத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 18 ஆசிரியர்களுக்கு ரிஓரி பயிற்சி தேசிய கல்வி நிறுவகத்தில் வழங்கப்பட்டது.

இதன் பிரதான வளவாளர்களாக சிங்கப்பூரைச் சேர்ந்த டிஜிற்றல் ஊடக தளத்தில் நிபுணத்துவம் மிக்க சுவப்னா பவர் மற்றும் கோபல் அஹர்வால் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினர்.

இதனை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு வியாழக்கிழமை சான்றிதழ்களும் வழங்கி வைகக்கப்பட்டன. குறித்த செயற்திட்டம் இந்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (05 - 100)

# புளியம் பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் ஏற்பாடுகள் பற்றி ஆய்வு

வரலாற்று சிறப்பு மிகு கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரபொங்கல் நிகழ்வு எதிர்வரும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் குறித்த பொங்கல் உற்சவத்தின் போது மேற்கொள்ள வேண்டிய போக்குவரத்து, பாதுகாப்பு மற்று சுகாதாரவசதிகளை உள்ளிட்ட பொங்கலின் போது மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் கண்டாவளை பிரதேச செயலாளர், மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட இலங்கை போக்குவரத்து மற்றும் தனியார் போக்கு வரத்து துறையினர், மின்சார சபை உத்தியோகத்தர்கள் ,பொதுசுகாதார பரிசோதகர்கள், பொங்கலுடன் தொடர்புடைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் ,ஆலய நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இம்முறையும் பாரம்பரிய முறைப்படி பண்டம் எடுக்கும் வைபவம் புத்தூர் சந்தி மீசாலையிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் பங்குனி மாதம் 17 ஆம் திகதி விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி அன்று பிற்பகல் பண்ட வண்டில்கள் புத்தூர் சந்தி நோக்கி சென்று பொங்கல் அன்று 24.02.2024 பண்ட வண்டில்கள் ஆலயத்தை வந்தடையும் பாரம்பரியமாக மேற்கொள்ளும் பொங்கள் நிகழ்வு நடைபெறும். (05-113)

# கல்முனை பஹ்ரியாவுக்கு விளையாட்டு உபகரணங்கள் ஹரீஸால் கையளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களால் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை கல்வி வலய கல்முனை கமுஃகமுஃ அல்- பஹ்ரியா மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் பைசால் தலைமையில் விளையாட்டு அபிவிருத்தி மேம்பாடு, உடற்கட்டமைப்பு வளர்ச்சித் திறன் அபிவிருத்தி போன்ற நோக்கங்களுக்காக உடல் வலுவூட்டல் உபகரணங்கள் முதற்கட்டமாக வழங்கி வைக்கப்பட்ட இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை மாணவர்களிடம் வழங்கி வைத்தார்

இந் நிகழ்வில் பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர் யூ.எல். சிபான், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம்.ஏ.எம் ரியால், ஏ.டபிள்யூ அசாக்கான் மற்றும் பிரிலியண்ட் விளையாட்டுக் கழக தலைவரும், கல்முனை 12 ஆம் வட்டார அமைப்பாளருமான எம்.எஸ்.எம் பழீல், பிரிலியண்ட் விளையாட்டுக் கழக செயலாளர் எஸ்.டி.எம் பஸ்வாக், பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.எம் ஹாஜா, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் ஏ.எல்.எம் நபீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)

# கந்தரோடை ஞான வைரவருக்கு சுன்னாகம் லயன்ஸால் மடப்பள்ளி





கந்தரோடைப்பதி அருள்மிகு ஞான வைரவர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு நேற்று (வியாழக்கிழமை) குடமுழுக்கு இடம்பெற்று மஹா கும்பாபிசேகப் பெருவிழா நடைபெற்றது.

இதன் போது கந்தரோடைக் கிராமத்தில் கல்விப் பணியையும் ஆன்மீகப் பணியையும் தாம் வாழ்ந்த காலத்தில் செவ்வனே நிறைவேற்றிய சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களாக இருந்து அமரத்துவமடைந்துள்ள லயன் மகாதேவா - லயன் பூமாதேவி தம்பதிகளின் நினைவாக அவர்களது மகன் லயன் ம.பிரிதுவிராஜா அவர்களின் நிதிப்பங்களிப்பில் ஆலயத்துக்கு மடப்பள்ளியும் அன்னதானம் வழங்குவதற்கான சமையற் கூடமும் அமைத்துக் கொடுக்கப்பட்டு கும்பாபிஷேகப் பெருநாளில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த மடப்பள்ளியை சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான ஆளுநர் அவையின் ஆலோசகர் லயன் சி.ஹறிகரன், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஸ், கழக உறுப்பினர் லயன் வசீகரன் ஆகியோர் இணைந்து பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து, மடப்பள்ளியைத் திறந்துவைத்தனர்.

லயன் மகாதேவா குடும்பம் கந்தரோடையில் எத்தனையோ ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பேருதவிபுரிந்து அவர்களின் வாழ்வுக்கு ஒளியேற்றியவர்கள். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை போன்றவற்றுக்கு கட்டடங்கள், சிறுவர் பூங்கா, குடிநீர் வசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வு போன்றவற்றுக்கு ஏராளமான பங்களிப்பை ஆற்றியவர்கள். ஆன்மீகப்பணியாக கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார், வற்றாக்கை அம்மன் ஆலயம் போன்றவற்றுக்கு சப்பை ரதம், தேர்முட்டி மற்றும் கட்டடப் பணிகள் என்று ஏராளமாக ஆற்றியவர்கள். அவர்களின் பணிகளை அவர்கள் மறைவுக்குப் பிற்பாடு அவர்கள் செய்த சேவைக்கு ஒருபடி மேலாக அவர்களது பிள்ளைகள் ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியாவில் மோட்டர் சைக்கிளில்வந்த இருவர் பெண் ஒருவரிடம் கைவரிசை

வவுனியா, கந்தபுரம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் வந்த இருவர் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார் எள வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கந்தபுரம் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் வீதியில் சென்ற போது பின் தொடர்ந்து மோட்டர் சைக்கிளில் சென்ற இருவர், குறித்த பெண்ணிடம் வேறு ஒருவரின் முகவரிவிசாரிப்பது போன்று கதைத்து விட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (05-100)

# குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கொலை செய்த கணவன்

திருகோணமலை - மூதூர் தோப்பூர் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக மனைவியை கணவன் கொலைசெய்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தோபூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவியின் ஆடையின் ஒரு பகுதியைப் பயன்படுத்திகணவன் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மனைவியின் கழுத்தை நெரித்துக் கொலை செய்த 33 வயதுடைய கணவன் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (50)





காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் சுகாதாரத்துறையின் மேம்பாட்டிற்கு ஊடகவியலாளர்களின் பங்களிப்பு அவசியம்

## வைத்தியர் சஹீலா இஸ்ஸதீன்



(அபு அலா)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹீலா இஸ்ஸதீன் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர் கலந்து கொண்டார்.

இங்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கும் போது, இப்பிராந்தியத்தில் பாதுகாப்பான, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

மக்கள் சுகாதாரத்துறையினருக்கு முழுமையான ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் வழங்கும்போதுதான் மேம்பட்ட சுகாதார சேவைகளை எமது பிராந்தியத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கடந்த காலத்தில் குறிப்பாகக் கொரோனாக் காலத்தில் இரவு பகலாக ஊடகவியலாளர்கள் பணியாற்றியதை ஞாபகப்படுத்தி நினைவு கூர்வதுடன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

எமது பிராந்திய சுகாதாரத்துறையின் முன்னேற்றத்திற்காக ஊடகவியலாளர்களின் ஆரோக்கியமான கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம். சுகாதார மேம்பாட்டை முன்னெடுப்பதில் பல சவால்களும் உள்ளன. அந்த சவால்களை வெற்றிகொள்ள மக்களை விழிப்பூட்டுவற்காக ஊடகவியலாளர்கள் சிரத்தையுடன் பணியாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

சுகாதாரத்துறையின் எழுச்சிக்காகப் பல்வேறு தரப்பினருடனும் தொடரான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில்தான் பெறுமதிமிக்க ஊடகவியலாளர்களையும் சந்திக்கின்றோம். - என்றார்.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் சுகாதாரத்துறை சம்பந்தமான தமது கருத்துக்களையும் முன்வைத்தமை விசேட அம்சமாகும். (05)

# வவுனியாவில் வயல்விழாவும் வர்த்தக ரீதியிலான வீட்டுத்தோட்ட செய்கையும்





வவுனியா, கலசியம்பெலாவ பகுதியில் வயல்விழா நிகழ்வும் வர்த்தக ரீதியிலான வீட்டுத தோட்ட செய்கை தொடர்பான நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பரசூட் முறையில் நெற்செய்கை செய்யும் முறை மற்றும் அம்முறையை எவ்வாறு செய்வது தொடர்பாக செய்முறை விளக்கங்களை விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

மேலும், இம்முறை மூலமாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயலினை விருந்தினர்கள் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டிருந்ததுடன், வர்த்தக நோக்கில் பயிரிடப்பட்ட வீட்டுத்தோட்ட செய்கையையும் பார்வையிட்டிருந்தனர்.

வவுனியா பிரதி விவசாய பணிப்பாளர் பி. அற்புதசந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகு, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் மற்றும் விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (05-100)

# கொழும்பில் சில பகுதிகளில் இன்று நீர்வெட்டு அமுலாகும்

(கே எ ஹமீட்)

கொழும்பில் சில பகுதிகளில் இன்று 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இன்று (சனிக்கிழமை) மாலை 5 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை இந்த நீர்வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு 11,12, 13, 14, மற்றும் 15 ஆகிய பிரதேசங்களுக்கு இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பத்தல நீர் விநியோக திருத்தப்பணிகள் காரணமாக நீர் விநியோகம் இடைநிறுத்தப்படுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (05)

# சுதந்திரதின நிகழ்வுகளில் பங்கேற்ற சிறார்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு

## ரிஷாத், முஜிபுர் ரஹ்மான் பங்கேற்பு







76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொழும்பு-15 இல் அமைந்துள்ள 'சத்திரு செவன' அடுக்குமாடிக் குடியிருப்பில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்று, பல்வேறு திறமைகளை வெளிப்படுத்திய சிறார்களுக்கான பரிசளிப்பு விழா, கடந்த ஞாயிற்றுக்கிழமை குடியிருப்பு வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறார்களுக்கான பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் பாயிஸ் அறக்கட்டளையின் தலைவருமான மொஹமட் பஹத் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (05)

# பாலஸ்தீனர்களின் இனப்படுகொலையை கண்டித்துக் கல்முனையில் போராட்டம்










(பாறுக் ஷிஹான்)

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு இன அழிப்பைக் கண்டித்து பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனை வாழ் மக்களின் போராட்டம் மற்றும் துஆ பிராத்தனை நேற்று கல்முனை நகர ஜ/ம்மா பள்ளிவாசலின் அருகில் இருந்து ஆரம்பித்து கல்முனை ஐக்கிய சதுக்கத்திற்கு ஊர்வலமாக சென்று நிறைவடைந்தது.

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் நேற்றுடன் பல நாள்களாக இடம்பெற்று வருகின்ற நிலையில் யுத்தத்தால் இதுவரையில் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் மக்கள் உயிரிழந்துள்ளனர் .

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனையில் ஒன்று கூடிய பொது மக்கள் பல்வேறு சுலோகங்களை ஏந்தி துஆ பிராத்தனையில் ஈடுபட்டு அமைதியான முறையில் கலைந்து சென்றனர .(05)

## மாமனிதர் சந்திரநேருவிற்கு அம்பாறையில் நினைவேந்தல்



அம்பாறை மாவட்டத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பட்டில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன் போது பெரிய நீலாவணை, மற்றும் பாண்டிருப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் புஸ்பாராஜ் துஷானந்தன் தலைமையில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அரியநாயகம் சந்திரநேரு அம்பாறை மாவட்டம், திருக்கோவிலைச் சேர்ந்தவர். இவரது தந்தை 'அறப்போர்' கே. ஏ. டபிள்யூ. அரியநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். புரட்டஸ்தாந்துக் கிறித்தவர். சந்திரநேரு ஆரம்பத்தில் கல்பிட்டி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற் றினார். பின்னர் அரச சேவையில் இருந்து விலகி மாலைலதீவுக் கப்பல் ஒன்றில் இரண்டாம் அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார்.

ஆறு ஆண்டுகளில் கப்பல் கட்டனாக பதவி உயர்வு பெற்றார். பல ஆண்டுகள் மாலைதீவுக் கப்பலில் பணியாற்றினார். இக்காலத்தில் சிங்களப் பெண் ஒருவரைத் திருமணம் புரிந்தார்.

எண்பதுகளின் நடுப்பகுதியில் விடுமுறையில் நாடு திரும்பிய போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பூசா தடுப்பு முகாமில் ஓராண்டுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டார்.

சிறை வாழ்க்கை அவரை தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்த்தது. ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க ஆரம்பித்தார்.

1990களில் இறுதியில் பணியில் இருந்து ஓய்வு பெற்று திருக்கோவில் திரும்பினார். அங்கு அவர் பல கடைகளைக் கொள்வனவு செய்து தொழிலதிபரானார்.

2001 நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரநேரு அம்பாறை மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்டு 26,282 விருப்பு வாக்குகள் பெற்று வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

2004 தேர்தலில் போட்டியிட்டு 25,572 விருப்பு வாக்குகள் பெற்றுத் தோல்வியடைந்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில், 2005 பெப்ரவரி 7 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மட்டக்களப்பு-அம்பாறை அரசியல் பொறுப்பாளர் இ. கௌசல்யனுடன் சந்திரநேரு பயணம் செய்த போது இவர்கள் சென்ற வாகனம் பொலன்னறுவை மாவட்டத்தில் தாக்குதலுக்குள்ளானதில் கௌசல்யன், மற்றும் மேஜர் புகழன் (சிவலிங்கம் சுரேஷ்), மேஜர் செந்தமிழன் (தம்பிராசா கந்தசாமி), 2 ஆம் லெப்.விதிமாறன் (சிவபாதம் மதன்) ஆகிய மூன்று விடுதலைப் புலிகள், ஊர்தி ஓட்டுனர் விவேகானந்தமூர்த்தி ஆகியோர் கொல்லப்பட்டனர்.

படுகாயமடைந்து பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சந்திரநேரு அடுத்த நாள் பெப்ரவரி 8 காலையில் உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு சந்திரநேருவிற்கு 'நாட்டுப்பற்றாளர் விருது', மற்றும் 'மாமனிதர்' விருதுகளை வழங்கிக் கௌரவித்தது.

இன்று 2024, 19, வருடங்கள் கடந்தும் அவர்களின் கொலைக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை நினைவுகள் மட்டும் தொடர்கிறது.
(05)

## நற்பிட்டிமுனை மு.கா. முக்கியஸ்தர்களின் கோரிக்கை தலைமைக்கு அனுப்பப்படும்

### முஸ்லிம் காங்கிரஸ் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே ஏ ஹமீட்)

கல்முனை மாநகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள நற்பிட்டிமுனைப் பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களால் முன்வைக்கபபட்ட நியாயமான கோரிக்கைகள் கட்சித் தலைவருக்கும், கட்சியின் உயர் பீடத்திற்கும் எமது குழுவால் முன்வைக்கப்படும் என நற்பிட்டிமுனை முதலாம் கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் மக்பூல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தலைவர் அஸ்ரப் அவர்கள் கட்சியை ஆரம்பித்த காலத்தில் இருந்து நற்பிட்டிமுனை பிரதேச மக்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு பாரிய பங்கினை வகித்து வருகின்றனர். நற்பிட்டிமுனை பிரதேசத்தில் இருந்து நாடாளுமன்ற, மாகாண சபை, பிரதிநிதித்துவங்கள் கிடைக்க வாய்ப்பு இல்லாத நிலையில் கல்முனை மாநகர சபை அதிகாரத்தில் முக்கிய பதவி வழங்க வேண்டும். என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இது தொடர்பாக கட்சியின் தலைவருக்கும், கட்சியின் உயர் பீடத்துக்கும் எமது குழுவால் முன்வைககப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள நற்பிட்டிமுனை, மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி, ஒலுவில், பாலமுனை, இறக்காமம், வரிபத்தான் சேனை, வாங்காமம், நாவிதன் வெளி போன்ற பிரதேசங்கள் தான் தலைவர் அஸ்ரப் அவர்களையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும் நூறு வீதம் ஏற்றுக்கொண்ட பிரதேசங்களாகும். காலப்போக்கில் தான் பெரிய ஊர்கள் பெரும்பான்மையாக எமது கட்சியை ஏற்றுக்கொண்டன.

நற்பிட்டிமுனை பிரதேசத்தில் எல்லா கிராம சேவகர் பிரிவுகளிலும் கட்சி கிளைகள் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யபட்டுள்ளன. அடுத்த கட்டமாக இளைஞர் கிளைகள், மகளிர் கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் நிறைவு செய்த பின் நற்பிட்டிமுனை பிரதேசத்திற்கான மத்திய குழு கட்சியின் தலைவரால் நியமிக்கப்படும். இதன் பின் கட்சி கட்டமைப்புக்கு ஏற்ப செயற்பாடுகள் முன்னெப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளனர். இனிமேல் கட்சிக்குள் குழுக்களாக இயங்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். கட்சி தொடர்பான செயற்பாடுகள், அபிவிருத்தி தொடர்பான விடயங்கள், மக்கள் தொடர்பான விடயங்களை எல்லோரும் ஒற்றுமையாக அமர்ந்து தீர்மானங்கள் எடுக்கக் கூடிய நடைமுறைகளை செயற்படுத்தும் போது தான் கட்சியின் கிராம மட்ட பலம் பலப்படுத்தும் நிலைமை ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கட்சியின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதர், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன், நற்பிட்டிமுனை மத்தியகுழுச் செயலாளர் ஏ.எஸ்.எம்.ஜஃபர், மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.
(05)

## மதுரங்குளியில் விபத்து ஒருவர் பரிதாபச் சாவு

கொழும்பு - புத்தளம் பிரதான வீதியின் மதுரங்குளி 10 ஆம் கட்டை பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி , புபுதுகம பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பஸ்தரே விபத்தில் உயிரிழுந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பகுதியில் இருந்து புத்தளம் பகுதியை நோக்கிப் பயணித்த சொகுசு கார் , வீதியோரத்தில் நின்ற நபர் மீது மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் தனது மகனை பஸ்ஸில் ஏற்றுவதற்காக குறித்த நபர் தனது வீட்டிக்கு முன்னால் வீதியோரத்தில் நிற்றுகொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளார்.

எனினும், தந்தைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த மகன் தெய்வாதீனமாக எவ்விதமான காயங்களும் இன்றி உயிர்தப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சொகுசு கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வீதியோரத்தில் நின்ற குறித்த நபர் மீது மோதியுள்ளது என விசாரணையில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(05)

காலைக்கதிர் Kalaikkathir

# தனியான மேம்படுத்தப்பட் ஆய்வுகூட விரிவாக்கல் கல்முனைக்குத் திறப்பு!

(அபு அலா)

அட்டாளைச்சேனை - பாலமுனை பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலையில் கல்முனை பிராந்திய ஆய்வு கூடத்தின் விரிவாக்கல் நிலையம் நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய ஆய்வு உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இபாம் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவிற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளில் இருந்து கிடைக்கப்பெறும் இரத்தம், சிறுநீர் மற்றும் சளி மாதிரிகளை குறித்த ஆய்வு கூடத்தில் மிக விரைவாக பரிசோதனை செய்து அதன் பெறுபேறுகளை வழங்கி வைக்கும் நோககில் இந்நிலையம் செயற்படும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹீலா இஸ்ஸதீன் இதன் போது தெரிவித்தார். நாட்டின் பொருளாதார நிலைமையை கருத் திற்கொண்டும், எரிபொருளை சிக்கனமாகப் பாவிப்பதற்கும், மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கும், மருத்துவ பரிசோதனை கருவிகளை முகாமைத்துவம் செய்வதற்கும் இந்நிலையம் ஏதுவாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.ஏ.கபூர், பிராந்திய மலேரியா மருத்துவ அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌசாட், மாவட்ட ஆயுர்வேத பிராந்திய இணைப்பாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், தொழில் மற்றும் சுற்றுச்சூழல் உணவுப் பாதுகாப்பு பிராந்திய வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.நௌசாட், பொதுமக்கள் சுகாதார பிராந்திய பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.சாபி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

# போதையற்ற தேசத்தை உருவாக்க விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம்

## பொத்துவிலில் தொடங்கி பாசிக்குடா வரை

(பாறுக் ஷிஹான்)

மருதமுனை ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகம் ஏற்பாடு செய்துள்ள போதையற்ற தேசத்தை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் பொத்துவில் தொடக்கம் பாசிக்குடா வரைக்குமான விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம் இன்று (சனிக்கிழமை) பொத்துவில் அறுகம்பையில் இருந்து காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு வியாழக்கிழமை இரவு நடைபெற்றது.

இதன் போது சர்வதேச தொண்டு நிறுவன தலைவர் கலீல் கபூர் , பிரதித் தலைவர் வைத்தியர் ஏ.ஆர்.எம். அஸ்மி, வைத்தியர் ஏ.எஸ். பௌசாட் , நெல்லியடி காப்புறுதி நிறுவன பிராந்திய முகாமையாளர் துரை கோபிநாத் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.ஏ மலீக் , பிரதி செயலாளரும் சிரேஷ்ட பொது சுதாதார பொறுப்பதிகாரியுமான எம்.என்.எம். பைலான், ஆசிரியர் பரமேஸ்வரன் ஆகியோரும் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர். (05)

# மாவடிப்பள்ளி பிரதேசத்தில் தன்னியக்க ஏரிஎம் நிறுவ ஹரீஸ் எம்.பி. நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

மாவடிப்பள்ளி பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாக இருந்துவரும் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரம் (ஏரிஎம்) ஒன்றை மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நிறுவ மக்கள் வங்கி தவிசாளர் சுஜீவ ராஜபக்ஷவை நேற்று(வெள்ளிக்கிழமை) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துரையாடினார்.

இதன் போது மாவடிப்பள்ளி மற்றும் அதனை அண்டிய பிரதேச பொருளாதார நிலைகள், அரிசி ஆலைகளின் அமைவிடம், பல்வேறு வியாபார தளங்கள் உள்ள பிரதேசம், குறித்த பிரதேசத்தில் எந்த வங்கிகளினதும் கிளைகள் இல்லை போன்ற பல்வேறு விடயங்களை மக்கள் வங்கி தவிசாளருக்கு விளக்கி தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். இதனை ஏற்றுக்கொண்ட மக்கள் வங்கி தவிசாளர் சுஜீவ ராஜபக்ஷ கூடிய விரைவில் அதனை நிறுவ தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினருக்கு உறுதியளித்தார். (05)



# ஜேர்மன் தூதுவரை சந்தித்தார் சிறீதரன்

இலங்கைக்கான ஜேர்மன் தூதரகத்தின் அழைப்பின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ் நியூமன் அவர்களை, அண்மையில் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவுக்கும் நோக்கில் ஜேர்மன் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில், ஈழ அரசியல் பரப்பை முன்னிறுத்திய அவரது அடுத்தகட்ட செயல்நோக்குகள் குறித்து தாம் கரிசனையோடிருப்பதாக தூதுவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-113)

# புளியங்குளம் பண்ணையில் யானையின் சடலம் மீட்பு

வவுனியா புளியங்குளம், பழையவாடியில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான பண்ணை காணியில் இருந்து யானை ஒன்று சடலமாக மீட்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை குறித்த காணியில் யானை ஒன்று இறந்து கிடப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தார்.

அதற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற புளியங்குளம் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையின் இறப்பு தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்த யானை 24 வயது மதிக்கத்தக்கது எனத் தெரிவிக்கப்படுவதுடன், சடலம் நேற்று உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் அக்காணியின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (05)

# பெண்களோடு சேட்டை இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸில் பெண்களிடம் அத்துமீறிய இரு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 22 மற்றும் 24 வயதானவர்கள் எனவும், அராலி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# சம்பூர் கடற்கரைப் பகுதிகளில் புலிகளின் ஆயுதம் தேடி அகழ்வு

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்பூர் கடற்கரைப் பகுதியில் தமிழ் ஆயுத போராட்ட அமைப்பால் புதைக்கப்பட்டு வைக்கபட்டுள்ள ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து நேற்று (வெள்ளிக்கிழமை) அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கபட்டிருந்தன. எனினும் அங்கிருந்து எவ்வித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். சம்பூர் கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பூர் பொலிஸாரால் அகழ்வு செய்யப்படுவதற்கு நீதிமன்றின் அனுமதியைப் பெற்று மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்லீம் பௌஸான் முன்னிலையில் இந்த அகழ்வுப்பணி இடம்பெற்றபோது அங்கிருந்து எவ்வித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை. இதனையடுத்து குறித்த இடத்தில் தோண்டப்பட்ட இடம் மீண்டும் பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50)

# யாழ். பிரதி பொலிஸ் மா அதிபர் மாவட்டச் செயலருடன் சந்திப்பு



யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனை வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல், போதைப்பொருள் பாவனை, சட்டம் ஒழுங்கு என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் இணைந்துகொண்டார். (50)

# மக்கள் வங்கி கல்முனைக் கிளையை புதிய கட்டடத்தில் திறக்க வலியுறுத்து

## விரைவில் விலை மனுவும் கோரப்படுகிறது



(நூருல் ஹுதா உமர்)

மக்கள் வங்கியின் கல்முனை கிளையை புதிய நவீன கட்டடத் தொகுதியில் அமைக்க ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மக்கள் வங்கியின் தவிசாளர் சுஜீவ ராஜபக்ஷவுக்கு வழங்கிய பணிப்புரைக்கு இணங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸுக்கும் மக்கள் வங்கி தவிசாளருக்குமிடையிலான சந்திப்பு மக்கள் வங்கி தலைமையகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை மாநகரம் இலங்கையின் முக்கிய வர்த்தக நகரங்களில் ஒன்றாகவும், கிழக்கில் பிரதான வர்த்தக மைய நகரமாகவும் இருந்து வருவதுடன் இங்கு மக்கள் வங்கியின் கல்முனை கிளைக்கான நிரந்தர கட்டடம் இன்னும் கட்டப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மக்கள் வங்கி தவிசாளருக்கு சுட்டிக்காட்டி இந்த கட்டட நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பில் சகல விடயங்களையும் கேட்டறிந்த மக்கள் வங்கி தவிசாளர் உரிய அதிகாரிகளை அழைத்து இந்தக் கட்டடத்தைக் கட்டத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக ஒதுக்குமாறு பணித்துள்ளார். கூடிய விரைவில் விலைமனு கோரப்பட்டு கட்டட நிர்மாண பணிகளை ஓரிரு மாதங்களுக்குள் ஆரம்பித்து வேகமாக கட்டடப் பணிகளை நிறைவு செய்து தருவதாக மக்கள் வங்கி தவிசாளர் சுஜீவ ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இடம் உறுதியளித்துள்ளார். இதனால் கல்முனை மாநகர மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (50)

# யாழ். பல்கலைக்கழகத்தின் 38ஆவது பட்டமளிப்புவிழா மார்ச் 14,15,16இல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மார்ச் மாதம் 14,15,16 நடத்த பல்கலைக்கழக நிர்வாகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறத் தகுதியானவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தைப் பார்வையிட முடியும். (50)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2024இல் வெளியிடப்பெற்றது.